ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்
திகதி 2023.12.04

# இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க ஹொங் கொங்கில் 2023 நவெம்பர் 29 அன்று இடம்பெற்ற நிதியியல் உறுதிப்பாட்டு சபையின் ஆசியப் பிராந்திய ஆலோசனைக் குழுமக் கூட்டத்திற்கு இணைத்தலைமை வகித்தார்

ஆசியாவிற்கான நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை பிராந்திய ஆலோசனைக் குழு ஹொங் கொங் விசேட நிருவாகப் பிராந்தியத்தில் 2023 நவெம்பர் 29 அன்று கூடியதுடன்[1] அண்மைக்கால நிதியியல் சந்தை அபிவிருத்திகள் மற்றும் பிராந்தியம் மீதான அவற்றின் தாக்கம், வங்கியல்லா நிதியியல் இடையீட்டிலிருந்து தோன்றுகின்ற பாதிக்கப்படும்தன்மைகள், சில வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் இறையாண்மை-வங்கி தொடர்பு தீவிரமடைதல் அத்துடன் மறைகுறிச்-சொத்து தொடர்புடைய இடர்நேர்வுகள் பற்றிய செயல்திறன்மிக்க ஒழுங்குபடுத்தலையும் மேற்பார்வையையும் ஊக்குவிப்பதற்கான வழிகள் என்பன பற்றி கலந்துரையாடியது. இவ் இடர்நேர்வுகளை அடையாளப்படுத்தல், கண்காணித்தல், கையாளுதல் என்பன பற்றிய தமது அனுபவங்களை உறுப்பினர்கள் பகிர்ந்துகொண்டதுடன் நிதியியல் முறைமைகளின் தாக்குப்பிடிக்கும்தன்மையை அதிகரிப்பதன் மீது நிதியியல் உறுதிப்பாட்டு சபை தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதையும் வரவேற்றனர்.

ஹொங் கொங் நாணய அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலரும் நடப்பு உறுப்பு இணைத்தலைவருமான திரு. எட்டி யூஈ மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் ஆசியாவிற்கான பிராந்திய ஆலோசனைக் குழுவின் தற்போதைய உறுப்பல்லாத இணைத்தலைவருமான முனைவர். நந்தலால் வீரசிங்க ஆகியோர் கூட்டத்திற்கு இணைத்தலைமை வகித்தனர். அவுஸ்ரேலியா, புரூனை தாருஸலாம், கம்போடியா, சீனா, ஹொங் கொங் விசேட நிர்வாகப் பிராந்தியம், இந்தியா, இந்தோனேசியா, யப்பான், கொரியா, மலேசியா, நியுசிலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் நிதியியல் அதிகாரசபைகளை ஆசியாவிற்கான பிராந்திய ஆலோசனைக் குழும உறுப்புரிமை உள்ளடக்குகின்றது.

நிதியியல் முறைமைகளுக்குத் தாக்கம் ஏற்படுத்துகின்ற பாதிக்கப்படும்தன்மைகள் மீதும் நிதியியல் உறுதிப்பாட்டினை ஊக்குவிப்பதற்கான முன்முயற்சிகள் மீதும் கருத்துக்களைப் பரிமாற்றவதற்கு நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை உறுப்பு மற்றும் உறுப்பல்லாத நாடுகளின் நிதியியல் அதிகாரசபையினை ஒன்றாகச் சேர்ப்பதற்காக நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை சாசனத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆறு பிராந்திய ஆலோசனைக் குழுக்களை நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை கொண்டுள்ளது. நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையானது தேசிய நிதியியல் அதிகாரசபைகளின் மற்றும் சர்வதேச மட்டத்தில் சர்வதேச நியம நிர்ணய நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதுடன் நிதியியல் உறுதிப்பாட்டு நலனுக்காக செயல்திறன்வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் ஏனைய நிதிசார் துறைக் கொள்கைகளை தயாரிப்பதுடன் அவற்றின் நடைமுறைப்படுத்தலையும் ஊக்குவிக்கின்றது.



*இடமிருந்து வலம்: முனைவர் நந்தலால் வீரசிங்க - ஆளுநர் இலங்கை மத்திய வங்கி, திரு. எட்டி யூஈ - ஹொங் கொங் நாணய அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலர், திரு. ஜோன் சிச்சின்லர் - செயலாளர் நாயகம், நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை*

---

[1] ஆசியாவிற்கான பிராந்திய ஆலோசனைக் குழுக் கூட்டத்தினைப் பற்றிய நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை ஊடக அறிக்கை: https://www.fsb.org/2023/11/fsb-asia-group-discusses-vulnerabilities-arising-from-rising-interest-rates-and-non-bank-financial-intermediation/